வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 18 of 2019

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுப்புரத்தினம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | ராமசாமி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09.03.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது மசினக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2017 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 1011/2017 சட்டபிரிவுகள் 279,304(A) இதசவில் சிறப்பு உதவி ஆய்வாளர் மயில்சாமி பதிவு செய்து புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு30.11.2017 ஆம் தேதி காலை 9.15 மணிக்கு சாட்சி பாபு ரஞ்சித் மற்றும் கருப்புசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி தயார் செய்தேன். அந்த மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ.4** ஆகும். பின்னர் பல்லடம் அரசு மருத்துவமனை சென்று காலை 10.30 மணிக்கு வழக்கில் இறந்து போன அந்ததோனிஎன்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்பு பிரேத விசாரனை செய்து அறிக்கை தயார் செய்தேன் அந்த பிரேத விசாரனை அறிக்கை **அ.த.சா.ஆ. 5** ஆகும்.

2)பிரேதத்தினை இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தினை காவலர் 1354 கோபிநாத் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பின்னர்அலெக்சான்டர், ஜான்பால், ஆம்பேராஸ், சேவியர், ஜோன், பாபு ரஞ்சித் மற்றும் கருப்புசாமி ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.12.2017 ஆம் தேதி நிலையம் ஆஜரான எதிரி சுரேஷ் என்பவர் கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN33 N 2587 என்ற அரசு பேருந்தை மோட்டார வாகன ஆய்வாளருக்கு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். அன்றைய தினம் சாட்சி ஸ்ரீனிவாசன் அவர்களை விசாரித்து ஓட்நர் பணி அமர்த்தும் கடிதம் மற்றும் டிரிப் சீட் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஓட்டுநர் பணி அமர்த்தல் கடிதம் மற்றும் டிரிப் சீட் முறையே **அ.த.சா.ஆ. 6 மற்றும் 7** ஆகும்.

3)பின்னர் 24.02.2018 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆகும். வழக்கில் அந்ததோனியின் இறப்பை உறுதி செயத் பல்லடம்அரசு மருத்துவமனை மருத்தவர் கோபி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ. 9** ஆகும். பின்னர் வழக்கில் இறந்துபோன அந்தோனியின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட பல்லடம் அரசு மருத்துவமனை மருத்துவர் தினேஷ் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ. 10** ஆகும். இத்துடன் எனது புலன் விசாரனை முடித்து 24.02.2018 ஆம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 279,304(A) இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) எனது விசாரணையில் புகார்தாரர் அலெக்சான்டர் தான் புகார் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. சாட்சி ஜான்பால் அன்னை வேளாங்கணி சர்ச்சிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக சாட்சி ஆம்ரோஸ் மற்றும் இறந்துபோன ஆன்டனியுடன் ஒன்றாக ரோட்டில் நின்றுக்கொண்டிருந்தோம் என்று சொல்லியுள்ளாரா என்றால் சர்ச்சிற்கு போவதற்காக நின்று கொண்டிருந்ததாக சொல்லியுள்ளார். ஜான் போல் ஆண்டனி ரோட்டை கடப்பதற்காக தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றபோது பேருந்து மோதியதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்ததாக சொல்லியுள்ளார். அ.சா.2 ஜான் பால் எனது விசாரணையில் அன்றைய தினம் தான் எங்கிருந்து புறப்பட்டு தான் வேளாங்கனி சர்ச்சிற்கு வந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் எங்கிருந்து வந்ததாக சொல்லவில்லை நின்றுக்கொண்டிருந்ததாக சொல்லியுள்ளார்.

2)ஜான் பால் எனது விசாரணையில் பேருந்தின் ஓட்டுநரை சம்பவ இடத்தில் வைத்து பார்த்ததாக சொல்லியுள்ளாரா என்றால்  பேருந்து ஓட்நரின் பெயர் மட்டும் சொல்லியுள்ளார் தான் பார்த்ததாக சொல்லவில்லை. அ.சா.2 ஜான் பால் பேருந்தின் எந்த பகுதியில் ஆன்டனி மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. பாபு ரஞ்சித் என்பவர் அ.சா.2 ஜான் பாலின் நண்பர் என்பதை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சம்பவ இடம் பல்லடத்தில் இருந்து செட்டிபாளையம் வழியாக கொச்சின் செல்லும் சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பாதசாரிகள் சாலைகளை கடப்பதற்காக ஏதேனும் பிரேத்தியேக குறியீடு இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு பல்லடம் காவல் நிலையத்திற்கும் 1 கிமீ தூரம் என்றால் சரிதான்.

3) சம்பவ நடந்ததற்ககும் புகார் பதிவு செய்யப்பட்ட நேரத்திற்கும் சுமார் 13 மணி நேரம் காலதாமதம் என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் புகார் கொடுக்கவில்லை. இடைப்பட்ட நேரத்தில் காவல் நிலையத்திற்கு மருத்துவமனையில் இருந்தோ வேறு எந்த வழியிலோ தகவல் வரவில்லை என்றால் தகவல் வந்தது. தகவல் வந்ததன் அடிப்படையில் எந்த நடவடிக்கை எடுக்கவில்லையா என்றால் தகவல் கிடைக்கப்பெற்ற நேரம் சரியாக ஞாபகமில்லை. பார்வை மகசர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.4 அம்ரோஸ் எனது விசாரணையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்து ரோட்டை கடந்த போதுதான் விபத்து நடந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். எனது விசாரணையில் அ.சா.4 அம்ரோஸ் விபத்து ஏற்பட்டு 100 மீட்டர் தள்ளி பேருந்து நின்றதா என்று சொல்லியுள்ளாரா என்றால் தள்ளி நின்றதாக சொல்லியுள்ளார்.

4) எனது வரைப்படத்தில் சம்பவ இடம் என்று குறிப்பிட்டு காட்டியுள்ளேனா என்றால் பெருக்கல் குறி போடப்பட்டுள்ளது சம்பவ இடம் என்று எழுதப்படவில்லை. நான் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டார் என்றாலும் தான் பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.4 அம்ரோஸ் பேருந்தின் ஓட்டுநர் பற்றிய விவரத்தை எனது விசாரணையில் சொன்னாரா என்றால் குன்னூரை சேர்ந்த சந்திரன் மகன் சுரேஷ் என்று சொல்லியுள்ளார். சம்பவ தினத்திற்கு மறுநாள் எதிரி தானாக நிலையம் ஆஜரானவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஜான் பால், அம்ரோஸ் ஆகியோர் இறந்தவருக்கு நெருங்கிய உறவினர் என்றாலும் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், விபத்தை கண்ணுறவில்லை என்றால் சரியல்ல. மாநில நெடுஞ்சாலையில் சாலையில் வரும் வாகனங்களை கவனிக்காமல் இரவு நேரத்தில் திடீரென அனுமதிக்கப்படாத இடத்தில் குறுக்கே கடந்து விபத்து ஏற்பட்டது என்றும் இதை

என் விசாரணையில் தெரிந்துக்கொண்டு இறந்துபோன நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்று தரவேண்டி எதிரி மீது சரியாக புலன் விசாரணை செய்யாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.09 18:07:16 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.